### மெட்ரோ ரெயில் நிலையங்களில்

# கொரோனா வைரஸ் பரவல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

## இன்று நடக்கிறது

சென்னை, பிப்.20-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் பொதுமக்களுக்கு, மெட்ரோ ரெயிலில் பயணிக்கும் பயணிகளுக்கு பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வுகளை தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறது. அந்தவகையில் கொரோனா காலத்தில் மெட்ரோ ரெயில்களில் பயணிப்பது பாதுகாப்பானது என்பதை பயணிகளுக்கு தெரிவிக்கும் விதமாக இன்று (ஞாயிற்றுக்கிழமை) பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.

அந்தவகையில் சென்னை திருவொற்றியூர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இன்று(சனிக்கிழமை)மாலை 6 மணி முதல் 8.30 மணி வரை பறையாட்டம் நிகழ்ச்சி மூலமும், விம்கோ நகர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இன்று மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை மெல்லிசை கலை நிகழ்ச்சி மூலமும் கொரோனா பரவல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.